**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No.11/2022 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW. 1 |
| | Defence |
| | Court |
| Name | ரவிசங்கர் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 28th day of November 2025.

Signature of Witness

Name of the INterpreter: Tmt. Mohana, Gr.III, Bench Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the th day of October 2025.

Signature of Interpreter

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது எண்,6 ராஜவீதி வாலாஜாபாத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். நான் ராஜவீதியில் பங்க் கடை நடத்தி வந்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசாா் கேட்டுக்கொண்டதற்கு நான் புகாரில் கையெழுத்து செய்தேன். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 09.04.2015 அன்று இரவு 7.00 மணியளவில் நான் கடையில் வியாபரம் செய்து கொண்டிருந்த போது 22 வயது மதிக்கத்த ஆஜர் எதிரி ஒரு பில்டர் கிங்ஸ் சிகிரெட் பாக்கெட் கேட்டார். நான் அவரிடம் சிகிரெட் பாக்கெட் கொடுத்துவிட்டு ரூபாய் 110 கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி நான் யார் தெரியுமா? சின்ன காஞ்சிபுரம் பொரியகுளத்தை சேர்ந்த சந்தோஷ் என்றும் என்னை பார்த்தாலே சின்ன காஞ்சிபுரமே நடுங்கும். நான் ஏற்கனவே ஜெயிலுக்கு போய் வந்தவன் என்று எங்கிட்டேயே சிகிரெட்டுக்கு பணம் கேட்கிறாயா என்று இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து என் கழுத்தின் அருகில் வைத்து சத்தம் போட்டால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டி என் பாக்கெட்டிலிருந்த ரூபாய் 220ஐ பறித்துகொண்டு ஒடியதாகவும் பொதுமக்கள் சத்தம் கேட்டு அவரை பிடிக்க வந்ததாகவும் அவர்களிடம் கத்தியை காட்டி மிரட்டி அங்கிலிருந்து

தப்பி ஓடிவிட்டதாகவும் இது சம்பந்தமாக நான் வாலாஜபாத் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு தற்பொழுது எதிரியை வழக்கிலிந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்